# ஷாப்பிங் பை தயார் செய்யுங்கள்




இந்த வீடியோவில் பல விதமாக உபயோகமாகும் ஒரு தோள் பையை எப்படி தைப்பது என்று பார்க்கலாம். ஷாப்பிங் செய்யும் போது நாம் வாங்கும் பொருட்கள் பலவற்றையும் இந்தப் பையில் போட்டுக் கொள்ளலாம். அதனால் பிளாஸ்டிக்கின் பயன்பாட்டை தவிர்க்கலாம். இல்லையா?



வசதியான ஒரு தோள் பையை தைப்பதற்கு தேவையானவை

பளிச்சென்ற நிறத்தில் கெட்டியான ஒரு துணி. இது 18 இன்ச் உயரமும் 34 இன்ச் அகலமும் இருக்க வேண்டும்.
இதன் ஹேன்டில் ஸ்ட்ராங்காக இருக்க வேண்டும். அப்போது தான் உள்ளே வைக்கும் பொருட்களின் கனத்தை தாங்க முடியும். பிறகு நிறைய பின்கள் தேவை.







அகலவாக்கில் ரைட் சைடுகள் ஒன்றை ஒன்று பார்த்தவாறு இருக்கும்படி வைத்துக் கொண்டு வீடியோவில் காட்டியவாறு ஓரங்கள் விலகாமல் பின் செய்து கொள்ளவும். மேல் பாகம் திறந்திருக்க வேண்டும்.

பின் செய்த துணியை மிஷினில் பொருத்திக் கொள்ளவும்.

ரிவர்ஸ் தையல் லீவரை பயன்படுத்தி இரண்டு ஓரங்களையும் லாக் செய்துகொள்ளவும். பின் செய்த எல்லா பாகத்தையும் தைக்கவும்.

தைத்த பகுதியில் இருக்கும் தேவையற்ற பிசுறு நூலை கத்தரித்துக் கொள்ளவும்.

இதே போல






இப்போது பிசுறு பகுதிகள் பிரியாமல் இருக்க ஓவர் எட்ஜ் எனப்படும் தையலை பயன்படுத்தவும்.

இப்படி தைக்க பேட்டர்ன் செலக்டரை ஊ யிலும் தையலின் நீளத்தை 1 லும் செட் செய்யவும்.

தணியை கோணல் இல்லாமல் புட்டின் அடியில் வைத்துக் கொண்டால் ஊசி விழும் இடத்தின் துளை நமக்கு தெரியும். பேலன்ஸ் வீலை கையால் சுற்றி ஓரங்களை சுருக்கம் இல்லாமல் தைக்க வேண்டும். சுருக்கம் இருக்கும் பகுதியை கையால் நீவி விட்டுக் கொண்டால் சுருக்கம் வராது.

மிஷினில் இருந்து துணியை வெளியே எடுத்து இருபுறமும் இருக்கும் பிசுறு நூலை கத்தரிக்க வேண்டும். அப்போது தான் தையல் நன்றாக இருக்கும்.



இப்போது பையின் மேல் பகுதியையும் ஹேன்டிலையும் எப்படி சேர்த்து தைப்பது என்று பார்க்கலாம். மேலாக உள்ள துணியின் ஓரத்தை முதலில் கால் இன்ச்சும் அடுத்து அரை இன்ச்சுமாக இரண்டாக மடித்துக் கொண்டு தைக்க ஆரம்பியுங்கள். பையின் ஹேன்டிலை மடிப்புக்குள் வைத்து பின் செய்து கொள்ளவும்.

இதே போல் வரிசையாக எல்லா மடிப்பையும் பின் செய்து கொள்ளவும். ஹேன்டில் எந்த இடத்திலும் மடங்காமலும் திரும்பாமலும் இருக்குமாறு கவனமாக பார்த்துக் கொள்ளவும். ஹேன்டிலை பையின் மற்றொரு ஓரத்தில் வைத்து பின் செய்து கொள்ளவும். இப்பொழுது தைப்பதற்கு ரெடி ஆகிவிட்டது.




இப்போது பேட்டர்ன் வீலை யு ல் வைத்து தையலின் நீளத்தை இரண்டரையில் வைக்கவும். எப்போதும் தையலை தொடங்கும் முன் பின்களை அகற்ற மறக்க வேண்டாம்.



ஹேன்டில் உறுதி ஆகவும் தையல் சுத்தமாகவும் இருக்க மடித்திருக்கும் துணியின் மேல் வீடியோவில் காண்பிக்கும் விதத்தில் இன்னொரு முறை தைக்கவும்.

பையை உள்ளிருந்து வெளிப்பக்கம் திருப்பி விட்டு அயர்ன் செய்யவும். கார்னர்களை சரிபடுத்தவும்.

இப்பொழுது நீங்கள் இந்த ஷாப்பிங் பேக் ஐ உபயோகிக்கலாம்.



இது போன்ற நிறைய பைகளை உருவாக்கி உங்கள் நண்பர்களுக்கு
பரிசளியுங்கள். இயற்கையுடன் ஒத்துப் போவோம்.